டால்பின்

DOLPHIN Primary Books

# சுந்தரத்தமிழ் இலக்கணப் பயிற்சி

## நூல் தொடர்



7

# 5. இடுகுறிப்பெயர், காரணப்பெயர்

நம் முன்னோர்கள் ஒரு பொருளைக் குறிக்க காரணம் எதுவுமின்றி இட்டு வழங்கிய பெயர்கள் இடு குறிப்பெயர்கள் ஆகும்.

(எ.கா) மண், குதிரை, மரம்.

இடுகுறிப்பெயர் இருவகைப்படும்.

1. அனைத்துக்கும் பொதுவாக வரும் இடுகுறிப்பெயர்கள் இடுகுறிப்பொதுப்பெயர் எனப்படும்.
   (எ.கா) மரம், செடி, கொடி, மலை, காடு

2. ஒரு இடுகுறிப்பெயர் ஒரு பொருளை மட்டும் சிறப்பாகக் குறிப்பிடுமானால் அது இடுகுறிச் சிறப்புப்பெயர் எனப்படும்.
   (எ.கா) மா, பருத்தி

பிற மொழிகளில் இடுகுறிச் சொற்களே மிகுதியாக உள்ளன.

ஏதேனும் ஒரு காரணம் கருதி நம் முன்னோர்கள் ஒரு பொருளுக்கு இட்டு வழங்கிய பெயர் காரணப்பெயர் எனப்படும்.

(எ.கா) பறவை, நாற்காலி, வளையல்

காரணப்பெயர் இரு வகைப்படும். காரணம் கருதி எல்லாப் பொருள்களுக்கும் பொதுவாக வழங்கும் பெயர் காரணப் பொதுப்பெயர் ஆகும்.

(எ.கா) பறவை, வளை, அணி

காரணம் கருதி ஒரு பொருளுக்கே சிறப்பாக வரும் பெயர் காரணச் சிறப்புப் பெயர் ஆகும்.

(எ.கா) வளையல், மரங்கொத்தி

தமிழ்மொழியில் காரணப்பெயர்களே மிகுதியாக உள்ளன.

## பயிற்சி – 10

**I.** பொருத்துக.

| | | |
|---|---|---|
| இடுகுறிப் பொதுப்பெயர் | – | மீன்கொத்தி |
| இடுகுறிச் சிறப்புப் பெயர் | – | பறவை |
| காரணப் பொதுப்பெயர் | – | தோட்டம் |
| காரணச் சிறப்புப் பெயர் | – | மல்லிகை |

தேதி : .................... ஆசிரியர் கையொப்பம் : ................................

# 7. தெரிந்து கொள்வோம்

பத்துப்பாட்டு நூல்களும், எட்டுத்தொகை நூல்களும் ''மேல்கணக்கு நூல்கள்'' என வழங்கப்படுகின்றன.

பத்துப்பாட்டு

| நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| திருமுருகாற்றுப்படை | நக்கீரர் |
| பொருநராற்றுப்படை | முடத்தாமக்கண்ணியார் |
| பெரும்பாணாற்றுப்படை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| சிறு பாணாற்றுப்படை | நல்லூர் நத்தத்தனார் |
| முல்லைப் பாட்டு | நப்பூதனார் |
| மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் |
| நெடுநல்வாடை | நக்கீரர் |
| குறிஞ்சிப்பாட்டு | கபிலர் |
| பட்டினப்பாலை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) | பெருங்கவுசிகனார் |

"முருகு பொருநராறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய
கோல நெடுநல்வாடை கோல் குறிஞ்சிப்
பட்டினப் பாலையொடு கடாத் தொடும் பத்து" – பழந்தமிழ் பாடல்

# 8. எழுவர் கொடுத்த கொடை

கடையெழுவள்ளல்கள் – சங்ககால கொடை மன்னர்கள்

பாரி :– பிரான்மலை (பறம்பு மலை) பகுதியை ஆட்சி செய்தவன்.
அங்கவை, சங்கவை என இரு மகள்களை உடையவன்.
"கொழு கொம்பின்றி வாடிய முல்லைக்கொடிக்குத்
தன் தேரை ஈந்தவன், கபிலர்பால் மிகுந்த நட்பு கொண்டவன்"

காரி :– திருக்கோவிலூரைத் தலைமையாகக் கொண்டு ஆட்சி செய்தவன்.
இரவலர்க்குக் குதிரைகளை வழங்கி நாட்டையும் நல்கியவன்.
வடவண்ணக்கன், பெருஞ்சாத்தனார், நப்பசலையார் ஆகிய புலவர்களால் பாடப்பெற்றவன்.

ஆய் :– பொதிய மலையை ஆட்சிசெய்தவன். ஆய் அண்டிரன், வேள் ஆகிய பெயர்களால் போற்றப்பட்டவன். நீலநிறப்பட்டாடையை ஆலமர் செல்வனுக்குக் கொடுத்து, வேண்டிய பொருட்களையும் ஊர்களையும் வந்தவர்க்கு எல்லாம் வழங்கி, எல்லாம் இழந்தவன். முடமோசியார், ஓடைக்கிழார் போன்ற புலவர்களை ஆதரித்தவன்.

# 12. குற்றியலுகரம்

குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம். குறுகிய ஓசையுடைய உகரம் குற்றியலுகரம் (இயல் – ஓசை)

வல்லின மெய்களின் மேல் ஊர்ந்து வரும் உகரம் (கு, சு, டு, து, பு, று) தனி நெடிலைச் சார்ந்து வரும்போதும், சொல்லின் இறுதியில் வரும்போதும் தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரை மாத்திரையாய் ஒலிக்கும். இது குற்றியலுகரம் எனப்படும். குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

குற்றியலுகரம் (குறுகிய ஓசையினை உடைய உகரம்)

| வ.எண் | வகைகள் | விளக்கம் | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|
| 1. | நெடில் தொடர் குற்றியலுகரம் | தனி நெடிலைத் தொடர்ந்து வரும் உகரம் | நாகு, காசு, ஆடு, மாது மாது, கோபு, ஆறு |
| 2. | ஆய்தத் தொடர் குற்றியலுகரம் | ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் | எஃகு, அஃது, கஃசு |
| 3. | உயிர் தொடர்க் குற்றியலுகரம் | உயிர் எழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் | அழகு, அரசு, பண்பாடு |
| 4. | வன் தொடர்க் குற்றியலுகரம் | வல்லின எழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் | சுக்கு, கச்சு, பட்டு |
| 5. | மென் தொடர்க் குற்றியலுகரம் | மெல்லின எழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் | சங்கு, பஞ்சு, நண்டு, சந்து |
| 6. | இடைத் தொடர்க் குற்றியலுகரம் | இடையின எழுத்தைத் தொடர்ந்து வரும் உகரம் | கொய்து, சார்பு, மூழ்கு |

தேதி : ...................... ஆசிரியர் கையொப்பம் : ..................................

# 17. அடைமொழி

பொருட்களின் பெயரைக் குறிக்கும் பொழுது ஒரு பொருள் பலவகைப்பட்டதாக இருந்தால், அவற்றை இனம் பிரித்துக்காட்ட ஒரு தனிச் சொல்லைச் சேர்த்துக் குறிப்பர். அச் சொல்லுக்கு அடைமொழி என்று பெயர்.

பொருட்களை இனம்பிரித்து அறிய உதவும் அடைமொழி இனமுள்ள அடைமொழி எனப்படும்.

(எ.கா) செந்தாமரை - வெண்டாமரை
பாற்குடம் - நெய்குடம்.

இனம் இல்லாதனவற்றுக்கு சிறப்பித்துக் கூறுவதற்காக அடைமொழி கொடுத்துக் கூறுவது இனமில்லா அடைமொழி எனப்படும்.

(எ.கா) செங்கதிரோன், வெண்ணிலவு
இனமாக கருங்கதிரோன், கருநிலவு என்பன இல்லை.

### பயிற்சி - 22

படங்களையும், சொற்களையும் கொண்டு பிரித்து எழுதுக



கார்த்திகை தீபம்


செஞ்ஞாயிறு


உப்பளம்


கருங்குயில்


பூமரம்


வெள்ளைப்பசு


வெண்திங்கள்


நீலமயில்


வெண்புறா


கருமேகம்

| இனமுள்ள அடைமொழி | இனமில்லா அடைமொழி |
|---|---|
| ---------------------- | ---------------------- |
| ---------------------- | ---------------------- |
| ---------------------- | ---------------------- |
| ---------------------- | ---------------------- |
| ---------------------- | ---------------------- |

தேதி : ....................



ஆசிரியர் கையொப்பம் : ..............................

## பன்முறை எழுதிப்பழகு

Complete range of DOLPHIN products available online at amazon.in

கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளில் உள்ள எழுத்துப்பிழைகளை சரிசெய்து எழுதுக.

அரிவுறை தமிள்நடு விங்ஞானம் தக்காழிப்பளம் திறுவல்லுவர்

அரன்மணை அய்வுக்குடம் வாலைமறம் நாண்கு வளிச்சாளை

அளுவழகம் பால்போறுள் அங்கடி ஊலவுத்தெளில் மகபரதாம்

ஓவியப் பேனா பயன்படுத்தவும்.

ISBN 978-93-812409-99-1

Designed, Printed & Published By :
Sekar Publishers
An ISO 9001:2000 Certified Company
3/1078/2, Meenampatti, Sattur Road, Sivakasi - 626189 Tamilnadu - India.
Tel : +914562 274132 Email: sekarpublishers@gmail.com

DOLPHIN® Primary Books

Log on to: www.dolphinprimarybooks.com